(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 157.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2017 மார்ச்சு 24 வெள்ளிக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

861/ '16

கௌரவ புத்திக பத்திரண,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யுத்த களத்தில் மரணித்த மற்றும் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களின் குடும்பங்கள் தற்போது சமூக பொருளாதார பிரச்சினைகள் பலவற்றுக்கு முகம்கொடுத்துள்ளன என்பதையும்;

(ii) இவர்களை அரவணைப்பது நாட்டிலுள்ள சகலரினதும் பொறுப்பாகும் என்பதையும்;

(iii) குறித்த வீரர்களின் மனைவிமார்களின் மற்றும் பிள்ளைகளின் நலனோம்பல் அதிகரிக்கப்பட வேண்டுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி இராணுவ வீரர்களது குடும்பங்களின் நலனோம்பலுக்காக அரசாங்கம் நடைமுறைபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி குடும்பங்களின் பிள்ளைகளது கல்வி நடவடிக்கைகள் மற்றும் தொழில் தேவைகள் சம்பந்தமாக அரசாங்கம் தலையிட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

984/ '16

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தற்போது இலங்கையிலுள்ள மின் பாவனையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இலங்கையின் மின் பாவனையாளர்களில், இலங்கை மின்சார சபையினால் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ள பாவனையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தினால் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ள பாவனையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

7.

1236/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தினுள் 1983 ஆம் ஆண்டளவில் இருந்த மொத்த வீதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் தார் இடப்பட்டிருந்த வீதிகளின் எண்ணிக்கை மற்றும் கி.மீ. அளவு எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டு தொடக்கம் யுத்தம் முடிவடையும் வரை இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக அப்போதிருந்த அரசாங்கங்களினால் செலவு செய்யப்பட்ட நிதித் தொகை ஒவ்வோர் ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தம் முடிவடைந்த பின்னர் இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டிலும் ஒதுக்கப்பட்ட நிதித் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) இது தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1280/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "அனைவருக்கும் மின்சாரம்" தொனிப்பொருளின் கீழ் கடந்த ஆட்சிக்காலத்தில் மின்பிறப்பாக்கம், மின்சார விநியோகம் மற்றும் புதிய இணைப்புகளை வழங்குதல் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க அரும்பணி ஆற்றப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை மாத்தறை மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள மின்இணைப்புகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடம் மற்றும் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தில் தேசிய மின்சார முறைமை ஊடாக மின்சாரத்தை வழங்கக்கூடிய இயலுமை உள்ளபோதிலும், இற்றைவரை மின்சாரம் வழங்கப்படாதுள்ள வீடுகளின் எண்ணிக்கை பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(ii) தேசிய மின்சார முறைமையிலிருந்து மின்சாரம் வழங்க இயலாத/சிரமமான வீடுகள் இனங்காணப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், அந்த வீடுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(iv) மேலே (ii)இல் குறிப்பிட்டுள்ள வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவதற்காக கடைப்பிடிக்கப்படுகின்ற வழிமுறைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1348/ '16

கௌரவ லக்கி ஜயவர்தன,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபைக்கு மின்சாரம் வழங்கும் சிறு மின்வலு நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் சபைக்கு மற்றும் தனியார் துறைக்கு சொந்தமான மின்வலு நிலையங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட மின்வலு நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை;

(iv) சபைக்குச் சொந்தமான மின்வலு நிலையங்களினால் பிறப்பாக்கம் செய்யப்படும் மொத்த மின்சார கொள்ளளவு யாது;

(v) ஒவ்வொரு மின்வலு நிலையத்தினதும் கொள்ளளவு வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தனியார் மின்வலு நிலையங்களிலிருந்து சபை ஒரு வருடத்தில் பெற்றுக்கொள்ளும் மொத்த கொள்ளளவு யாது;

(ii) ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் பெறப்படும் மின்சார கொள்ளளவு வெவ்வேறாக யாது;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட மின்சாரத்துக்காக செலுத்தப்படும் மொத்தத் தொகை எவ்வளவு;

(iv) இத்தொகை நிறுவனத்தின்படி வெவ்வேறாக யாது;

(v) தனியார் மின்வலு நிலையங்களிலிருந்து வழங்கப்படும் மின்சாரத்துக்காக அந்நிறுவனங்களுக்கு ஆரம்பம் முதல் இன்று வரை செலுத்தப்பட்டுள்ள பணத் தொகை வெவ்வேறாக யாது;

(vi) தற்போது சபையின் அனுமதியுடன் மேலும் சிறிய மின்வலு நிலையங்களை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா;

(vii) ஆமெனில், அவை யாவை;

(viii) அவற்றை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் அவற்றின் உரிமையாளர்கள் யாவர்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன் ?

12.

862/ ’16

கௌரவ புத்திக பத்திரண,— கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களைக் கட்டியெழுப்புவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பலத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும்;

(ii) அதன் மூலம் தொழிலின்மையை இல்லாதொழிக்கச் செய்ய முடியுமென்பதையும்;

(iii) அது வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தருகின்ற ஒரு வழியாகும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவையென்பதையும்;

(iii) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்காக நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற அரச நிறுவனங்களின் பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்திக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

1070/ ’16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1983 யூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் இடம்பெற்ற இனக் கலவரத்தின் காரணமாக,

(i) உயிரிழந்த, காயமடைந்த மற்றும் இடம்பெயர்ந்த சிங்கள மக்களின் எண்ணிக்கை, அவர்கள் வாழ்ந்த மாவட்டங்களுக்கமைய வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) உயிரிழந்த காயமடைந்த மற்றும் இடம்பெயர்ந்த மொத்த சிங்கள மக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

1284/ '16

கௌரவ டலஸ் அலஹப்பெரும,— தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு ,— (1)

( அ) (i) தெவிநுவர, வெஹெல்கொட, 'பிரேமசிறி', இல்லத்தில் வசிக்கும், திரு. எச். கே. பிரேமதிலக்க 1978.05.05 தொடக்கம் 1986.11.10 வரை இலங்கை விமானப்படையில் தொண்டர் சிப்பாயாகவும், 1986.11.03 தொடக்கம் 1995.11.30 வரை தொழில் திணைக்களத்தில் மேசன் பயிற்சி ஆலோசகராகவும், 1995.11.30 தொடக்கம் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையில் இணைந்து பணியாற்றினார் என்பதையும்;

(ii) 60 வயது நிறைவடைந்தமையால் 2015.09.18 ஆம் திகதி இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையிலிருந்து ஓய்வு பெறச்செய்யப்பட்டுள்ளார் என்பதையும்;

(iii) அரச சேவையில் 33 ஆண்டுகள் 04 மாதங்கள் 13 நாட்கள் பணிபுரிந்த போதிலும் அவரின் ஓய்வூதியம் கணிப்பீடு செய்யப்படவில்லை என்பதையும்;

(iv) தொழில் திணைக்களத்தில் பணிபுரிந்த காலத்துக்குரிய ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்வதற்காக முன்வைக்கப்பட்ட வேண்டுகோள், இவர் தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு எந்த தொகுதியின் கீழ் விடுவிக்கப்பட்டார் என்பது தெளிவில்லை எனும் கருத்தின் அடிப்படையில் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்பதையும்;

(v) பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்துக்கு எழுதிய PNS/P/P7/PEN/PROB(ii)/TEM ஆம் இலக்க 2016.07.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அவதானிப்புக்கள் கோரப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) திரு. பிரேமதிலக்கவின் ஓய்வூதிய உரித்தை வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

1377/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 வரவுசெலவு திட்டத்தில் 131 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம், கமத்தொழில் விரிவாக்க உத்தியோகத்தர்களின் அறிவை தனியார் துறை பண்ணைகளுக்காகவும் கட்டணம் அறவிட்டு பெற்றுக்கொடுக்க முன்மொழியப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறு கட்டணம் அறவிட்டு தனியார் துறைக்கு அறிவை பெற்றுக்கொடுத்த அரச உத்தியோகத்தர்களின் பெயர் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) கமத்தொழில் விரிவாக்க உத்தியோகத்தர்களின் அறிவை பெற்றுக்கொண்ட தனியார் துறைக் கம்பனிகளின் பெயர் பட்டியலை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

